# செப்டம்பர் – 07 – வெள்ளி

**புனித றெஜினா**

**ஆண்டவரை நம்பு: நலமானதைச் செய்: நாட்டிலேயே குடியிரு: நம்பத் தக்கவராய் வாழ். திபா. 37:3**

## முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 4 : 1 – 5

சகோதர சகோதரிகளே நீங்கள் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியர்கள், கடவுளின் மறை உண்மைகளை அறிவிக்கும் பொறுப்புடையவர்கள் எனக்கருதவேண்டும். பொறுப்பாளர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாய்க் காணப்படவேண்டும் என எதிர்பார்க்கலாம் அன்றோ! என்னைப் பொறுத்தமட்டில் எனக்கு எதிராக நீங்களோ மக்களின் நீதிமன்றமோ தீர்ப்பளித்தால் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படமாட்டேன். எனக்கு நானே தீர்ப்பளித்துக் கொள்ளவும் மாட்டேன். எனக்கு எதிராகக் குற்றம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் நான் குற்றமற்றவனாகி விடமாட்டேன். எனக்குத் தீர்ப்பு வழங்குபவர் ஆண்டவர் ஒருவரே. எனவே, குறித்த காலம் வருமுன், அதாவது ஆண்டவரின் வருகைக்குமுன் யாருக்கும் தீர்ப்பளிக்கவேண்டாம். அவரே இருளில் மறைந்திருப்பவற்றை வெட்டவெளிச்சமாக்குவார் உள்ளங்களின் நோக்கங்களையும் வெளிப்படுத்துவார். அப்பொழுது ஒவ்வொருவரும் கடவுளிடமிருந்து பாராட்டுப் பெறுவர்.

**பதில்பாடல் :** நேர்மையாளருக்கு மீட்பு ஆண்டவரிடமிருந்து வருகிறது.

## நற்செய்தி : லூக்கா 5 : 33 - 39

அக்காலத்தில் பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இயேசுவை நோக்கி, "யோவானுடைய சீடர்கள் அடிக்கடி நோன்பிருந்து மன்றாடிவருகிறார்கள் பரிசேயர்களின் சீடரும் அவ்வாறே செய்கின்றனர். உம்முடைய சீடரோ உண்பதும் குடிப்பதுமாக இருக்கின்றனரே!" என்றார்கள். இயேசு அவர்களைநோக்கி, "மணமகன் மணவிருந்தினர்களோடு இருக்கும்வரை அவர்களை நோன்பு இருக்கச்செய்யலாமா? ஆனால் மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம்வரும் அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்" என்றார். அவர் அவர்களுக்கு ஓர் உவமையையும் கூறினார் "எவரும் புதிய ஆடையிலிருந்து ஒரு துண்டைக்கிழித்து அதைப் பழைய ஆடையோடு ஒட்டுப் போடுவதில்லை. அவ்வாறு ஒட்டுப்போட்டால் புதிய ஆடையும் கிழியும் புதியதுண்டும் பழையதோடு பொருந்தாது. "அதுபோலப் பழைய தோற்பைகளில் எவரும் புதிய திராட்சை மதுவை ஊற்றி வைப்பதில்லை. ஊற்றி வைத்தால் புதிய மது தோற்பைகளை வெடிக்கச்செய்யும். மதுவும் சிந்திப்போகும் தோற்பைகளும் பாழாகும். புதிய மதுவைப் புதிய தோற்பைகளில்தான் ஊற்றி வைக்கவேண்டும். பழைய திராட்சை மதுவைக் குடித்தவர் எவரும் புதியதை விரும்பமாட்டார் ஏனெனில் "பழையதே நல்லது" என்பது அவர் கருத்து" என்றார்.

**தியானம் :** ஓய்வுநாள், நோன்பு இருத்தல் போன்ற யூதச்சட்டங்கள் மற்றும் பழக்க வழக்கங்கள் குறித்து இயேசுவுக்கும் பரிசேயர்களுக்கும் இடையே அடிக்கடி பிரச்சனைகள் ஏற்படுவதை நற்செய்தி குறிப்பிடுகிறது. இவற்றின் பிண்ணணியில் இன்றைய நற்செய்தியில் இயேசு சுட்டிக்காட்டும் ஓர் ஆழமான சிந்தனை சிந்திக்க நம்மை அழைக்கின்றனர். பழைய ஏற்பாட்டு யூதச்சட்டங்களை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தின் பிண்ணனியில் மக்களுக்கு பயிற்சி வழங்கவும் அவர்களில் நல்ல மனப்பான்மையை ஏற்படுத்தவும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தச்சட்டங்கள் மக்களில் எதிர்பார்க்கப்பட்ட நல்ல மனப்பான்மையை உருவாக்கியதா? என்ற கேள்வியை எழுப்பினால், இல்லை, என்கின்ற பதில் தான் வருகின்றது. காரணம் பரிசேயர்கள் பழைய ஏற்பாட்டுச ் சட்டங்களின் நோக்கத்தை முழுவதுமாக மறந்துவிட்டு அவற்றைச் சடங்காச்சாரமாக கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். எனவே மக்களின் மனநிலையில் மாற்றத்தை கொண்டுவராதச் சட்டங்களை இன்னும் தூக்கிப் பிடித்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்பதை இயேசு இன்றைய நற்செய்தியில் முன் வைக்கும் வாதம். மக்களை மாற்றாத சட்டங்களை மாற்றுவதில் தவறில்லை என்கிறார். பழைய தோற்பை யூதர்களின் பழைய சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளுக்கும் புதிய மது என்பதை இயேசு கொண்டு வந்த நெறிமுறைக்கும் அடையாளமாக இருக்கின்றன. எனவே பழைய தோற்பையான யூதர்களின் சடங்காச்சார அர்த்தமற்ற சட்டங்களை தூக்கி எறிந்தாலொழிய இயேசு தருகின்ற புதிய மதுவாகிய புதிய நெறிகளை நமதாக்க முடியாது. எனவே பாரம்பரியம் என்கின்ற பெயரில் அர்த்த மற்ற சடங்காச் சாரங்களை தூக்கி சுமக்கின்றோம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.